1973 ஆகஸ்ட் 7]

சென்னை நகரைச் சுற்றி வட்டப் பாதை.

*** 59 வினு—திரு. என். கிட்டப்பா :**

திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரைச் சுற்றி வட்டப்பாதை ஒன்று அமைத்திடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ் : இந்த வட்டப் பாதை அமைப்பதால் அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஏற்படும்? டூரிஸ்ட் போக்குவரத்திற்கு இந்தப் பாதை பெரிதும் உபயோகமாக இருப்பதால் விரைவிலே அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த வேலை அநேகமாக அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

The estimated cost is Rs. 3.2 crores and Rs. one crore respectively.

வியாசர்பாடிப் பகுதியில் செல்லும் தேசீய நெடுஞ்சாலை

*** 60 வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வியாசர்பாடிப் பகுதியில் ஜி.என்.டி. நெடுஞ்சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்பகுதி எப்போது அகலப்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இவ்வேலைக்காக 1973–74-ம் ஆண்டில் இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.